## என் ஆத்துமா என்னில் தொய்ந்துபோகையில் கர்த்தரை நினைத்தேன்;
## When my soul fainted within me, I remembered the LORD;

Praise the Lord: கிறிஸ்துவின் தேவசமாதானம் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்வதாக.

கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். (சங். 103:8)

The LORD is merciful and gracious, Slow to anger, and abounding in mercy.

மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன். (சங் 86:15)

full of compassion, and gracious, Longsuffering and abundant in mercy and truth

> ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபிரெயர்/Hebrews 4:16)
>
> Let us therefore come boldly unto the throne of grace, that we may obtain mercy, and find grace to help in time of need.

…..உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர்/Romans 8:36-39)

இந்த நிச்சயத்தோடு வாழும்போது, நம் ஆவி என்றும் உற்சாகமாக இருக்கமுடியும்.

> மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது: நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. கலாத்தியர் 5:17

மாம்ச பெலவீனத்தை மேற்கொள்ள…

சோர்ந்துபோகாமல், இளைப்படையாமல், உறங்காமல் சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கும் நமது கிறிஸ்துவை நோக்கிப்பார்த்து வேண்டுதலையும் விண்ணப்பத்தையும் சமர்ப்பித்தால் அவர் நம் பெலவீனங்களை மேற்கொள்ள நமக்கு ஆலோசனையும் பெலத்தையும் அருளும் ஆவியானவராக நம்மோடு இருந்து வழி நடத்துவார்.

……..வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

என்று சொல்லிய பவுல் அடுத்த வசனத்திலேயே அவருடைய மனவேதனையை தெரிவிக்கிறார்.

**ரோமர்/Romans 9:1 (பக்கம் 217)**

எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது;

அவருடைய இனத்தார்கள் ரட்சிக்கப்படாததைப் பார்த்து மனவேதனைப் படுகிறார்.

*(இந்த அதிகாரத்தை முழுவதும் வாசித்துப்பாருங்கள்…)*

*கிறிஸ்துவுக்குள் நமக்கு மன வருத்தம் ஏற்படுவதை 3ஆக பிரித்துப் பார்ப்போம்.*

1. நம் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் கிறிஸ்துவை அறியவில்லையே என்ற….. வருத்தம்.
   *(தேவனுடைய கிருபையை வேண்டுவோம்)*
2. கிறிஸ்துவை அறிந்த நம் திருச்சபை சகோதர சகோதரிகளுக்கும், கிறிஸ்துவை அறியாத சகோதர சகோதரிகளுக்கும் உள்ள கஷ்டங்கள் பற்றாக்குறைகள் போன்ற காரியங்களுக்காக….வருத்தம்.
   *(தேவனுடைய இரக்கத்தை வேண்டுவோம்)*
3. நம் சொந்த குடும்பத்திலே நமக்குள்ள கஷ்டங்கள் பற்றாக்குறைகள் போன்ற காரியங்களுக்காக….வருத்தம்.
   *(தேவனுடைய இரக்கத்தை வேண்டுவோம்)*

இந்த எல்லாக்காரியங்களுக்காகவும் நாம் வருத்தப்பட்டு **கவலைப்படுவது** நம் மாம்சத்தின் பெலவீனமாக இருந்தாலும்…..

வேதம் சொல்கிறது:

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.

அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். (பிலிப்பியர்/Philippians 4:6-7)

இதைத்தான் பவுல் செய்தார்.

எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது;

என்று ஒரு அதிகாரத்திலே தேவனிடத்தில் புலம்புகிறவர், அடுத்த அதிகாரத்திலே

**ரோமர்/Romans 10:1** (பக்கம் 218)

சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் **விண்ணப்பமுமாயிருக்கிறது**.

*துக்கமும் மனவேதனையும்…இருதயத்தின் விருப்பமும் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமாயிற்று.*

**யோனா/Jonah 2:7** (பக்கம் 1073)

என் ஆத்துமா என்னில் **தொய்ந்துபோகையில்** கர்த்தரை நினைத்தேன்; அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது.
When my soul fainted within me, I remembered the LORD; And my prayer went up to You, Into Your holy temple. (NKJV)
"When my life was ebbing away, I remembered you, LORD, and my prayer rose to you, to your holy temple. (NIV)
When my soul fainted upon me [crushing me], I earnestly and seriously remembered the Lord; and my prayer came to You, into Your holy temple. (AMP)

என் ஆத்துமா என்னில் **தொய்ந்துபோகையில்** கர்த்தரை நினைத்தேன்;
நினைத்தபொழுதே….. விண்ணப்பம் அவரிடத்தில் சேர்ந்தது.
கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததிகள்,…..
கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன். (ஏசா 65:24)

கர்த்தரின் நாமத்தை நினைத்து நினைத்து நீங்கள் விண்ணப்பம் செய்ய ஆயத்தமாகுங்கள்.
நீங்கள் கர்த்தரை நினைக்கும்போதே உங்கள் விண்ணப்பம் அவரிடத்தில் சேரும்.

**சங்கீதம்/Psalm 61:2** (பக்கம் 706)

என் இருதயம் **தொய்யும்போது** பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்; எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும்.
From the end of the earth I will cry to You, When my heart is overwhelmed; Lead me to the rock that is higher than I. (NKJV)
From the ends of the earth I call to you, I call as my heart grows faint; lead me to the rock that is higher than I. (NIV)

என் இருதயம் **தொய்யும்போது** கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்;
எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் கொண்டுபோய்விடும் என் மன்றாடுகிறார்.
*கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது நாம் நினைத்துப்பார்க்கமுடியாத அளவிற்கு ஆறுதல் தேவனிடத்திலிருந்து வரும்.*

**சங்கீதம்/Psalm 51:10** (பக்கம் 701)

**தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.**
Create in me a pure heart, O God, and renew a steadfast spirit within me. (NIV)
கருத்தாய் விண்ணப்பம் செய்கிறார்:
தேவனருளும் சுத்த இருதயத்தை நாம் காத்துக்கொள்ள,
அவருடைய நிலைவரமான ஆவி நமக்குள் ஒவ்வொருநாளும் புதுப்பிக்கப்பட வேண்டும்.
*மீண்டுமாக சங்கீதம்/Psalm 51:10 ஐ வாசிக்கவும்.*

*Our Bible Study ref:* ஆவி அறிந்துகொள்ளும், புரிந்துகொள்ளும்: ஆத்துமா தெரிந்துகொள்ளும்.
**Ref: Dictionary:**
**soul:** the principle of life, feeling, thought, and action in humans,…….
**spirit:** the principle of conscious life; animating the body or mediating between body and soul.

கர்த்தருடைய ஆவி நமக்குள் ஒவ்வொருநாளும் புதுப்பிக்கப்படும்போது,
உற்சாகமான ஆவி, நமது ஆத்மாவிலும் மாம்சத்திலும் உள்ள பெலவீனத்தை நீக்கிப்போடும். ஆமென்.
இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். (மத் 5:8)

Blessed are the pure in heart, for they will see God. (NIV)
கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். (சங். 103:8)
The LORD is merciful and gracious, Slow to anger, and abounding in mercy.
மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன். (சங் 86:15)
full of compassion, and gracious, Longsuffering and abundant in mercy and truth

கிறிஸ்துவின் பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம். (யோவான் 1:16)
Chirst fullness… we have all received, and grace for grace.

பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபிரெயர் 4:16)
Let us therefore come boldly to the throne of grace, that we may obtain mercy and find grace to help in time of need.

நம் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி தேவனையே நினைத்து, தேவனையே நோக்கி கூப்பிடுவோம் கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் விடுவிக்க வல்லவராக இருக்கிறார். ஆமென்.

## Let us Pray